கூட்ட எண் 08
2020 - 2021 -ம் ஆண்டு

நகராட்சி அலுவலகம்,
ஆரணி,
நாள் 31.09.2020

2020-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30.09.2020-ந்தேதி புதன் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

பொருள்கள்

1. இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செப்டம்பர் 2020 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் செப்டம்பர் 2020 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

3. ஆரணி நகராட்சியில் வார்டு 1 முதல் 33 வரை உள்ள வார்டுகளுக்கு குடிநீரில் குளோரின் கலந்து வழங்கப்பட்டு வருகிறது. தற்போது மேல்நிலை நீர் தேக்கதொட்டியில் குளோரின் இருப்பு குறைவாக உள்ளதால்,ஒப்பந்தாரர் நித்தின் எண்டர்பிரைசஸ் தற்காலிகமாக குளோரின் சப்ளை செய்ய முடியாத காரணத்தால்,10,000 லிட்டர் தனியாரிடம் வாங்க ஆகும் தோராய செலவினம் ரூ. யை குடிநீர் நிதியில்இருந்து செலவு செய்ய நகர மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு:- மன்றம் ஒப்புதல் அனுமதிக்கலாம்.(ந.க.எண் :766/2020/இ1)

4. ஆரணி நகராட்சியில் குடிநீர் விநியோகம் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி வழியாக குடிநீரில் குளோரின் கலந்து வழங்கப்பட்டு வருகிறது. தற்போது நகராட்சி அலுவலகம் பின்புறம் உள்ள நீர் உந்து நிலையம், கமண்டல நாகநதி Pump House மற்றும் தரை பாலம் பகுதியில் குளோரின் பம்பு பழுது ஏற்பட்டுள்ளது.எனவே பழுதான மோட்டார் மற்றும் பம்பு ரிப்பேர் சரி செய்ய (7nos) தோராய மதிப்பீடு ரூ. யை ஆகும் இப்பணி குடிநீர் மற்றும் கொரோனா நோய் தடுப்பு பணிக்காகவும் அவசர அவசியம் கருதி உடனடியாக பணிகள் செய்ய இந் நகர மன்றத்தின் அனுமதிக்கு வேண்டபடுகிறது.
அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண் :766/2020/இ1)

5. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் கொரோனா பணிகள் மற்றும் அலுவலக ஆய்வு அறிக்கை போன்றவற்றை கூட்டங்கள் நடத்துவதற்கு நேரடியாக நடத்த இயலாத காரணத்தால் ஒவ்வொரு வாரமும் Google Meet என்ற இணையதளம் வரியாக கூட்டம் நடத்தப்படுகிறது.அதற்கு தேவையான வசதியுடன் கூடிய கணினி All in One i3 Computer 2 எண்ணிக்கை வாங்கிக் கொள்வதற்கு தோராய செலவினம் ரூ.1.50 லட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.

6. ஆரணி நகராட்சியில் உள்ள பொது பிரிவு, பொறியியல் பிரிவு,பொது சுகாதாரப்பிரிவு,வருவாய் பிரிவு மற்றும் கணினி பிரிவில் பழுதடைந்துள்ள Canon MF4820 Printer 3 எண்ணிக்கையும்,Canon LPB 2900 B Printer 8 எண்ணிக்கையும்,பழுதடைந்துள்ளதை சரி செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.50,000/-க்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

7.இந்நகராட்சி அறிஞர் அண்ணா சித்த மருத்துவமனைக்கு கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகாகவும், சித்த மருத்துவமனைக்கு தேவையான 14 வகையான மருந்துகள் மற்றும் மாத்திரைகள் வாங்கவும் அதற்காக ஆகும் தோராய செலவினம் தொகை ரூ. 42150/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:1.மன்றம் அனுமதி அளிக்கலாம்.2.அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.3.மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். கோப்பு எண். 5783/2007/எச்1

8. கொரோனா வைரஸ் நோய் தொற்று பரவாவண்ணம் தடுப்பு நடவடிக்கையாக இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேகரமாகும் பயன்படுத்தப்பட்ட முக கவசங்கள், கையுரைகள் மற்றும் சுய பாதுகாப்பு உடைகளை தனியாக சேகரிக்கப்பட்டு பாதுகாப்பான முறையில் அழிக்க வேண்டி தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான சென்னை கென் பையோ லிங்க்ஸ் என்ற முகவர் இந்நகராட்சியில் வந்து பெற்றுகொள்ளவும் அதற்கான செலவினத் தொகை பிரதி மாதத்திற்கு ரூ.20000/-க்கு வீதம் மேலும்01.07.2020 முதல் 31.12.2020 ஆறு மாதங்களுக்கு ஆகும் தோராய செலவினமாக தொகை ரூ. 120000/-க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு.1. மன்றம் அனுமதி அளிக்கலாம். தனி அலுவலர் முன் அனுமதி பெற்று மேற்கண்ட செலவினம் வருவாய்நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். கோப்பு எண். 483/2020/எச்1

9. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் TN 97 1833 என்ற வாகனத்திற்கு சர்வீஸ் செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற LAWRENCE AUTO MOTIVE PVT.LTD என்ற நிறுவனத்திற்கு வாகனம் சர்வீஸ் செய்தமைக்கான தொகை ரூ. 12324/- மட்டும் வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி அளிக்கலாம். தனி அலுவலர் முன் அனுமதி பெற்று மேற்படி செலவினம் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். கோப்பு எண். 1057/2020/எச்1

10. ஆரணி நகராட்சியில் இளம் பட்டதாரிகளின் வேலைத்திறனை உயர்த்துவதற்காக சீர்மிகு திட்டத்தின் மூலம் பயிற்சி பெற தினத்தந்தி தமிழ் நாளிதழில் விளம்பரம் படுத்தியதற்கான செலவுத் தொகை ரூ. 4368/- யை வழங்கலாம்.அவசரஅவசியம் கருதி விளம்பரம் செய்ததை மன்றம் ஏற்கலாம்.மன்றத்தின் பர்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் ஒப்புதல் அனுமதிக்கலாம்.

11. ஆரணி நகராட்சியில் சேத்பட் சாலை,எம்.ஜி.ஆர் சிலை எதிரில் உள்ள பேருந்து நிறுத்தத்தில் உள்ள மேற்கூறையை (Bus Shalter) சட்ட மன்ற உறுப்பினர் மற்றும் அறநிலை துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு, மேற்கூறையில் (Bus Shelter) பெயர் பலகை (BRASS) வைக்க வாய் மொழி உத்தரவின்படி, பெயர் பலகை (BRASS) வைக்க ஆகும் தோராய மதிப்பீடு ரூ.30,000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

12. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள காந்தி நகர் பொது கழிப்பிடத்தில் Out Let பைப்பு அடைப்பு மற்றும் படிக்கட்டுக்கள் உடைந்த நிலையில் உள்ளதால், பொதுமக்கள் பயன்படுத்த சிரமமான நிலை உள்ளது. இதனை சரி செய்ய ஆகும் தோராய மதிப்பீடு ரூ.30,000/-க்கு பணி மற்றும் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.

13.ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் வடகிழக்கு பருவ மழை கரமானாக முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளவும்,மழை வெள்ளக் காலங்களில் சேதமடைந்து விழும் மரங்களை வெட்டி அப்புறபடுத்த,தேவையான 8**Nos** Hand Power Saw இயந்திரம் வாங்க ஆகும் தோராய செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.

14.இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை பணிகள் துரிதமாக மேற்கொள்ள வேண்டி கீழ்க்கண்டுள்ள பொருட்களான

| வ. எண் | கிருமிநாசினி பொருட்களின் விவரம் | எண்ணிக்கை அளவு |
|---|---|---|
| 1. | சோடியம் ஹைப்போகுளோரைடு | 3000 லிட்டர் |
| 2. | லைசால் | 3000 லிட்டர் |

மேற்கண்டவாறு உள்ள பொருட்களை வாங்க அதற்காக ஆகும் தோராய செலவினம் தொகை ரூ. 7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1.மன்றம் அனுமதிக்கலாம்.2.தனி அலுவலர் முன் அனுமதி பெற்று சப்ளை உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.3.மேற்படி செலவினம் Sec15ன்படி வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.கோப்பு எண். 483/2020/எச்1

15.இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை பணிகள் துரிதமாக மேற்கொள்ள வேண்டி கீழ்க்கண்டுள்ள பொருட்களான

| வ. எண் | கிருமிநாசினி பொருட்களின் விவரம் | எண்ணிக்கை அளவு |
|---|---|---|
| 1. | பிளிச்சிங் பவுடர் | 6000 கிலோ |
| 2. | நீர்த்தசுண்ணாம்பு நீர் | 5000 கிலோ |
| 3. | Hand Sanitizer | 300 லிட்டர் |
| 4. | கையுறை(ஒருமுறை மட்டுமே பயன்படும்) | 2000 எண்ணிக்கை |
| 5. | மூன்று அடுக்கு முகக்கவசம் | 2000 எண்ணிக்கை |
| 6. | முழு பாதுகாப்பு உடை | 800 எண்ணிக்கை |

மேற்கண்டவாறு உள்ள பொருட்களை வாங்க அதற்காக ஆகும் தோராய செலவினம் தொகை ரூ.13.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு.1.மன்றம் அனுமதிக்கலாம்.2.தனி அலுவலர் முன் அனுமதி பெற்று சப்ளை உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.3.மேற்படி செலவினம் Sec15ன்படி வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.

கோப்பு எண். 483/2020/எச்1